**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAA3B** Title of the Paper : **தமிழ் இலக்கிய வரலாறு - I**

DATE **:08.01.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. தொல்காப்பியத்தின் காலத்தைக் குறிப்பிடுக?
2. தமிழ் நாட்டின் எல்லைகளாக துரைசாமிப்பிள்ளை கூறுவன யாவை ?
3. கடைச்சங்கத்தின் காலம் எது ?
4. கடைச்சங்கம் பற்றிக் குறிப்பிடும் காப்பியம் எது ?
5. திரிகடுகம் பெயர் காரணம் கூறுக ?
6. திருக்குறள் எந்த நூற்றாண்டில் தோன்றியது ?
7. போர்க்களம் குறித்து பாடப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல் எது ?
8. குறுந்தொகையின் அடிவரையறை யாது?
9. எட்டுத்தொகையில் காணப்படும் புறநூல்களை எழுதுக ?
10. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களைக் கொண்டுள்ளது? .
11. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது ?
12. மேல்கணக்கு கீழ்க்கணக்கு குறிப்பு வரைக?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. தமிழ் மக்கள் குறித்த துரைசாமியின் கருத்துகளை எழுதுக
14. கடைச்சங்கத்தில் எழுந்த நூலகள் பற்றி எடுத்துரைக்க .
15. எட்டுத்தொகையில் காணப்படும் புறநூல்கள் குறித்து எழுதுக.
16. ஐங்குறுநூறு, கலித்தொகை சிறப்புகளை விளக்குக ?
17. நாலடியார், பழமொழி நூல் சிறப்புகளைத் தொகுத்துக் கூறுக ?
18. திருக்குறளின் பெருமையினைக் விவரி .?
19. சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகளைத் தொகுத்தெழுது ?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. இரட்டைக்காப்பியங்கள் காட்டும் சிந்தனைகளை எழுதுக.
21. பத்துப்பாட்டு நூல்கள் குறித்து எழுதுக ?
22. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நீதிநூற்கள் குறித்து விளக்குக .
23. கடைச்சங்கம் குறித்த செய்திகளைத் தொகுத்தெழுது .
24. தமிழ் மொழி , தமிழ்நாடு பற்றி சா. துரைசாமிப்பிள்ளையின் கருத்துகளை எழுதுக

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**IV SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAA4A** Title of the Paper : **தமிழ் இலக்கிய வரலாறு - II**

DATE **:08.01.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. 'இயற்கை நெறிக்காலம்' என்று எக்காலத்தைக் குறிப்பிடலாம்? ஏன்?
2. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'என்னும் பாடலடி இடம் பெற்றுள்ள நூலையும் இயற்றியவர் பெயரையும் கூறுக.
3. அறநூல்கள் எக்கருத்துகளை மையமாகக் கொண்டவை?
4. பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அறநூல்களைப் பட்டியலிடுக.
5. பல்லவர் காலத்தில் எவ்வகை சமயங்கள் மறுமலர்ச்சி பெற்றன? அம் மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள் யாவர்?
6. 'சிவஞான போதம்' – வரையறை செய்க.
7. சைவசித்தாந்தம் கூறும் நான்கு நெறிகள் யாவை?
8. தலபுராணங்கள்யாருடைய ஆட்சிக்காலத்தில் மிகுதியாகத் தோன்றின?அதற்கான காரணம் என்ன?
9. மறுமலர்ச்சிக் கவிஞர் என்று போற்றப்படுபவர் யார்?அதற்கான காரணம் யாது?
10. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் படைப்புகள் சிலவற்றைக் கூறுக.
11. 'வேளாண்வேதம்' என்று அழைக்கப்படும் நூல் எது?அவ்வாறு அழைப்பதன் காரணம் யாது?
12. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்? இந்நூல் யாருடைய வாழ்வியலைக் கூறுகிறது?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. சங்ககாலத் தமிழரின் வாணிகத் தொடர்பு குறித்து எழுதுக.
14. திருக்குறள் கூறும் வாழ்வியல் அறங்களைச் சுருக்கியுரைக்க.
15. திருமூலர் வரலாறு குறித்து எழுதுக.
16. தமிழ்நாட்டில் நிலைபெறுவதற்குச்சமணரும் பௌத்தரும் கையாண்ட முறைகள் யாவை?
17. தமிழ்நாட்டு தத்துவ நெறி, அறிவியல் நெறி- மதிப்பீடு செய்க.
18. திருக்குறளுடன் நாலடியார் ஒப்பிட்டுக் காட்டுவதன் காரணத்தினைக் கூறுக.
19. பக்தி இயக்கத்தில் பெண் நாயன்மார்களின் பங்களிப்பினை எடுத்துரைக்க.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. 'சங்ககாலம் ஒரு பொற்காலம்' என்பதனை ஆய்ந்துரைக்க.
21. பதினெண் கீழ்க்கணக்கில் நீதிநூல்கள் குறித்து விளக்கமாக எழுதுக.
22. பல்லவர் காலச் சமய மறுமலர்ச்சி பக்தி இயக்கமாக மாறியதன் காரணத்தினை ஆய்க.
23. சைவசித்தாந்த சாத்திரங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
24. தற்காலத்தை 'அறிவியல் நெறிக்காலம் 'என்று அழைப்பதன் நோக்கத்தினை விரிவாக எடுத்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAE5B** Title of the Paper : **இதழியல்**

DATE **:12.01.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. "இதழியல்" - விளக்கம் தருக.
2. இதழ்களின் பணிகள் நான்கினை எழுதுக.
3. இதழியல் சட்டங்கள் நான்கினை எழுதுக.
4. பத்திரிக்கை மன்றத்தின் பணிகள் நான்கினை எழுதுக.
5. இந்தியச் செய்தி நிறுவனங்கள் இரண்டினை எழுதுக.
6. உலகின் முதல் செய்தி நிறுவனம் எங்கு எப்போது நிறுவப்பட்டது?
7. பக்க வடிவமைப்பின் நோக்கங்கள் நான்கினை எழுதுக.
8. மெய்ப்புத்திருத்துதல் என்றால் என்ன?
9. விளம்பர நோக்கங்களில் நான்கினை எழுதுக.
10. "தலையங்கம்" - குறிப்பெழுதுக.
11. இதழ்களில் இடம்பெறும் படங்களின் வகைகளில் இரண்டிணை எழுதுக.
12. தமிழில் வெளிவரும் புலனாய்வு இதழ்கள் நான்கினை எழுதுக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. தமிழ் இதழ்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
14. பதிப்புரிமைச் சட்டத்தினை விளக்குக.
15. "நேர்காணல்" - பயன்களை விளக்குக.
16. துணை ஆசிரியன் பணிகளை மதிப்பிடுக.
17. விளம்பர வகைகளை விளக்குக.
18. செய்தி ஆசிரியர் பணிகளை விவரி.
19. இதழியலாருக்கான பொதுவான தகுதிகள் யாவை?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. "இதழ்களின் சுதந்திரம்" - கட்டுரைக்க.
21. "தமிழ் இதழ்களின் தோற்றமும் வளர்ச்சியும்" - விளக்குக.
22. செய்தி திரட்டும் முறைகளை விவரி.
23. "அச்சுப்படி திருத்தம்" - விளக்குக.
24. தற்காலத் தமிழ் இதழ்களின் நிலையினை ஆராய்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204
NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS
II SEMESTER – B.A. Tamil

Paper Code : **UAM2C** Title of the Paper : **இக்கால இலக்கியம் - II**

DATE **:04.01.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. நீதிதேவன் மயக்கம் என்னும் நாடகநூலை இயற்றியவர் யார்? அவருடைய சிறப்புப் பெயர் என்ன?
2. நும் பாடப்பகுதி நாடகத்தில் இடம்பெறும் கதைமாந்தர்கள் இருவர் பெயரைக் குறிப்பிடுக.
3. சிங்காரவேலருக்கு வழங்கும் சிறப்புப்பெயர் யாது? அவர் எந்த இயக்கத்தைச் சார்ந்தவர்?
4. சிங்காரவேலரின் பெற்றோர் யாவர்?
5. “தமிழ் விருந்து” இயற்றியவர் யார்? அவருடைய சிறப்புப் பெயர் யாது?
6. மு.வ இயற்றிய நான்கு படைப்புகளை எழுதுக.
7. ஜோசப்பின் மனைவி மற்றும் அவன் நண்பன் பற்றி எழுதுக.
8. அகல்விளக்குக் காட்டும் கதை மாந்தர்கள் சிலரைக் குறிப்பிடுக.
9. அகல்விளக்கோடு வேலுவைத் தொடர்புபடுத்தி எழுதுக.
10. ரா.பி. சேதுப்பிள்ளை - சிறு குறிப்புத் தருக.
11. ஜெயகாந்தனின் படைப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
12. புதினம், சிறுகதை - விளக்கம் தருக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. கம்பன் வாதத்திற்கு இராவணன் மறுப்பு யாது?
14. சிந்தனைச் சிற்பியின் “பொதுவுடமை” சிந்தனையை விவரி.
15. ரா.பி.சேதுப்பிள்ளை தமிழை ஏன் விருந்து என்று கூறுகிறார்?
16. மு.வரதராசனார் - குறிப்பு வரைக.
17. அகல் விளக்கு காட்டும் வேலு, சந்திரன் இரு பாத்திரப் பண்பு நலன்களை விவரி.
18. நீதி தேவன் மயக்கம் காட்டும் கம்பன், மண்டோதரி பற்றி எழுதுக.
19. ஜோசப் - குரங்கு பொம்மைகளுடன் மனிதர்களை எவ்வாறு ஒப்பிடுகிறார்?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. அறிஞர் அண்ணாவின் துணை கொண்டு நீதி தேவன் மயக்கத்தைத் தெளிவுபடுத்துக.
21. சிங்காரவேலர் வாழ்வியல் வழி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்துரைக்க.
22. ‘தமிழ் விருந்து’ கூறும் செய்திகளை தொகுத்துரைக்க.
23. அகல்விளக்கு நாவல் காட்டும் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுக.
24. “யாருக்காக அழுதான்” என்றும் புதினத்தில் - அழுதவன் யார்? ஏன்? ஆராய்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**II SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM2D** Title of the Paper :நன்னூல்-சொல்லதிகாரம்

DATE **:07.01.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. இடக்கர் அடக்கல் என்றால் என்ன?எ.கா.தருக.
2. திரிசொல்-குறிப்பு தருக.
3. செய்யுள் குறித்து நன்னூலார் கூறுவது என்ன?
4. எவன்என் வினாவினைக் குறிப்புஇழி இருபால் -விளக்கம் தருக.
5. பெயரெச்சம் என்றால் என்ன?
6. முன்னிலை அசைச்சொல் பற்றி நன்னூலார் கூறுவது என்ன?
7. மரபு என்றால் என்ன?
8. ஐந்தாம் வேற்றுமை பொருள் குறித்து கூறுக.
9. அசைச்சொற்கள் என்றால் என்ன?அதன் வகைகள் யாவை?
10. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினான'-பொருட் குறிப்பு தருக.
11. முற்றும்மை ஓரோ வழி எச்சம் ஆகுமா?
12. நான்கறிவு உயிர்க்குச் சான்று தருக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. ஆகுபெயர் என்றால் என்ன?அதன் வகைகளுள் ஐந்தினைச் சான்றுகளுடன் எழுதுக.
14. அஃறிணை ஒன்றன்பால் பெயர்கள் குறித்து இயம்புக.
15. வினை எச்சத்தினை விளக்கிச் சான்று தருக.
16. திணைபால் வழுவமைதி குறித்து இயம்புக.
17. இடைப்பிறவரல் குறித்து எடுத்துகாட்டுடன் விளக்குக.
18. தொகாநிலைத் தொடர் மொழியைச் சான்றுடன் விவரிக்க.
19. பல குணம் தழுவிய ஒர் உரிச்சொல் குறித்து எழுதுக

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. எண் வகை வேற்றுமைகளையும் விளக்கி சான்று காட்டுக.
21. வினைமுற்றுக்களின் வகைகளைச் சான்றுகளுடன் விவரித்துரைக்க.
22. தொகைநிலைத்தொடர்மொழி குறித்து விளக்கியுரைக்க.
23. இடைச்சொற்கள் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.
24. நன்னூலார் உரியியலில் கூறுவனவற்றை விளக்கியுரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM3C** Title of the Paper : **நம்பியகப்பொருள்**

DATE **:31.12.2020 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. முதற்பொருள் வகைகளை எழுதுக.
2. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் – குறிப்பு வரைக.
3. காவல்பிரிவு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. பகற்குறி என்றால் என்ன?
5. இடந்தலைப்பாடு – குறிப்பு வரைக.
6. வன்புறை என்றால் என்ன?
7. பூத்தரு புணர்ச்சி – விளக்கம் தருக.
8. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
9. கற்பின் இலக்கணத்தை எழுதுக.
10. இல்வாழ்க்கையின் வகைகளைத் தெரிவிக்க.
11. ஒழிபியல் – பெயர்க்காரணம் கூறுக.
12. 'கருப்பொருள் பிறக்கும் இறைச்சிப்பொருளே' – விளக்கம் தருக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. பெரும்பொழுதின் வகைகளை விளக்குக.
14. மெய்யுறு புணர்ச்சிக்கு முன் நடைபெறும் பத்துஅவத்தைகளை விவரிக்க.
15. களவிற்கு உரிய கிளவித் தொகைகள் யாவை?
16. பிரிவுழிக் காலங்களின் விரிகளை விளக்குக.
17. வரைவு மலிதலின் விரிகளை எழுதுக.
18. இல்வாழ்க்கையின் விரிகளை விளக்குக.
19. அகப்புறப் பெருந்திணைக்குரியவைகளாக ஒழிபியல் தரும் செய்திகள் யாவை?

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கருப்பொருளின் வகைகளை எழுதி குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருளை விளக்குக.
21. பாங்கி உடன்பாட்டின் வகைகளை விவரிக்க.
22. தலைவி, பாங்கி, செவிலி அறத்தொடு நிற்கும் முறைகளைத் தெரிவிக்க.
23. உணர்த்த உணரா ஊடற்கு உரிய கிளவிகள் யாவை?
24. கூற்றுப் பற்றி ஒழிபியல் தரும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**III SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM3D** Title of the Paper :**இலக்கியம் –III சமயப் பாடல்களும் சிற்றிலக்கியங்களும்**

DATE **:05.01.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. 'பித்தா பிறைசூடி' என்று யார் யாரைக் கூறுகிறார்**?**
2. இறைவனை நாவுக்கரசர் எங்ஙனம் அழைக்கிறார்**?**
3. சதகம்**–** குறிப்பு வரைக.
4. ஆழ்வார்கள் என்போர் யார்**?**
5. வாரணம் ஆயிரம் என்றால் என்ன**?**
6. திருமங்கையாழ்வார்**–** குறிப்பு வரைக.
7. குமரகுருபரர் குறித்து எழுதுக.
8. மாணிக்கவாசகர் அருளிய நூல்களைக் கூறுக.
9. கிம்புரி, கவுரியன்**–** பொருள் தருக.
10. தூது என்றால் என்ன**?**
11. குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்**?**
12. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்**?**

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**.

13. சிவபெருமானின் பெருமைகளை சுந்தரர் எவ்வாறு போற்றிப் பாடுகிறார்**?**
14. ஆண்டாள் கண்ட கனவினை விவரிக்க.
15. மீனாட்சியம்மையை குமரகுருபரர் எப்படிச் சித்திரிக்கிறார்**?**
16. தமிழ்மொழியின் சிறப்புகளை விளக்குக.
17. வசந்தவல்லி பந்தாடலின் சிறப்பினை விவரிக்க.
18. இறைவனை திருநாவுக்கரசர் எங்ஙனம் விளித்து மகிழ்கின்றார்**?**
19. குற்றாலக் குறவஞ்சி இலக்கியச் சுவையினை எழுதுக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி**.

20. திருச்சதகத்தில் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தும் இறையனுபவத்தை எடுத்துரைக்க.
21. திருக்குறுந்தாண்டகத்தில் திருமங்கை ஆழ்வார் புலப்படுத்தும் இறைபக்தியை விளக்குக.
22. வருகைப் பருவத்தில் மீனாட்சியம்மையை குமரகுருபரர் எவ்வாறு போற்றிப் பாடுகிறார்**?**
23. தமிழே தூதாக அமைந்த பாங்கினை விளக்கியுரைக்க.
24. குறவஞ்சி வெளிப்படுத்தும் மலைவளத்தினைப் புலப்படுத்துக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**IV SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM4C** Title of the Paper : **புறப்பொருள் வெண்பாமாலை**

DATE **:31.12.2020 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. புறப்பொருள் – விளக்கம் தருக.
2. புறப்புறத் திணைகளாக வழங்கப்படுபவை எவை?
3. வெட்சித்திணையின் இரு வகைகளைச் சுட்டுக.
4. பிள்ளைப்பெயர்ச்சி என்றால் என்ன?
5. வஞ்சிப்போரின் இலக்கணத்தை இயம்புக.
6. காஞ்சித்துறைகள் எத்தனை? ஏதேனும் நான்கினை எழுதுக.
7. நொச்சித்திணையின் துறைகளை நிரல்படக் கூறுக.
8. குற்றுழிஞை என்ற புறத்துறையை விளக்குக.
9. தானை, யானை பற்றிக் கூறும் தும்பைத்துறைத் திணைகள் யாவை?
10. அரசவாகை, முரசவாகை - குறிப்புரைக்க.
11. 'மூன்றுதலையிட்ட மூவீரைந்து' என்பதன் விளக்கம் யாது?
12. பாடாண்திணை என்றால் என்ன?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. வெட்சிப்போர் பற்றிய செய்திகளைச் சுருக்கியுரைக்க.
14. உழபுலவஞ்சி, மழபுலவஞ்சி, குறுவஞ்சி – விளக்கம் தருக.
15. எயில்காத்தல் முறைகளைச் சுட்டி விளக்குக.
16. பாசிநிலை, ஏணிநிலை, முதுஉழிஞை இவற்றை விளக்கி எழுதுக.
17. முல்லை என முடியும் வாகைத்துறைகள் யாவை? விளக்குக.
18. மன்னனது புகழைப் பாடாண்திணை எவ்வாறு எடுத்துரைக்கின்றது?
19. கொடிநிலை, கந்தழி, வள்ளி – இத்துறைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி - இ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கரந்தைத்திணையின் துறைகளைச் சுட்டி விளக்கி எழுதுக.
21. காஞ்சிப்போர் முறைகளை விளக்கியுரைக்க.
22. உழிஞைத்திணை பற்றிய செய்திகளை விரித்துரைக்க.
23. ஆற்றுப்படைத் துறைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு விளக்குக.
24. பண்டைத்தமிழரின் வீர வாழ்வியலை விவரிக்க.

## E - Mail Id for Uploading Answer Sheet
## tamildepartment@lngovernmentcollege.com

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**IV SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM4D** Title of the Paper : **காப்பியங்கள்**

DATE **:05.01.2021 FN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. கோவலன் கண்ணகி தந்தையர் பெயர்களை எழுதுக.
2. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
3. அரங்கேற்று காதையில் மூன்று வகை திரைச்சீலைகள் யாவை?
4. “மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை” - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
5. உவவனத்தில் உள்ள நான்கு மரங்களை எழுதுக.
6. “தத்தநமர்” விளக்கம் தருக.
7. மெய்ப்பொருள் நாயனார் எந்த நாட்டு அரசன்? அவரின் இறைக்கொள்கை யாது?
8. அனுமன் யாரைக்கண்டு சீதை என நினைத்தான்? யாரை இராவணன் என நினைத்தான்?
9. குறுகிய வடிவுடன் அனுமன் பவளக் குன்றில் எவ்வாறு தங்கினான்?
10. எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை சிறு குறிப்புத் தருக.
11. இயேசுபிரான் தன் தாயை ஒப்படைத்த செய்தியை எழுதுக.
12. சீறாப்புராணத்தில் உள்ள காண்டங்களை எழுதுக.

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. அரங்கேற்றுக் காதையில் நாட்டிய மேடை குறித்து எழுதுக.
14. கோவலனும் கண்ணகியும் மனையறம் நடத்திய பாங்கினை விளக்குக.
15. மணிமேகலை தன் தந்தையும் தாயையும் நினைந்து எவ்வாறு வருந்துகிறாள்?
16. முத்தநாதன் எவ்வாறு வஞ்சக வேடம் பூண்டான்?
17. இலங்கைமாதேவியை அனுமன் வென்ற விதத்தினை எழுதுக.
18. தேவபிரானின் சிலுவைப்பாடுகள் குறித்து எழுதுக.
19. உமறுப்புலவர் குறிப்பு வரைக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. கோவலன் கண்ணகியைப் பாராட்டிய விதத்தினை விரிவாக எழுதுக.
21. மலர் வனத்தில் மணிமேகலைக்கு நிகழ்ந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
22. மெய்ப்பொருள் நாயனாரின் இறைப் பற்றினை எழுதுக.
23. அனுமன் ஊர்தேடிய விதத்தினைக் கம்பன் வழி நின்று விளக்குக.
24. சீறாப்புராணத்தில் நகரப் படலம் குறித்து கட்டுரை வரைக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A., Tamil**

Paper Code : **UAM5E** Title of the Paper : **சங்க இலக்கியம் (அகம்)**

DATE **:24.12.2020 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. நற்றிணையில் வரும் தலைவி கார் கால வரவைக் கண்டு எவற்றைக் கொடியது என்று கூறுகின்றாள்?
2. தேரினைப் பாகன் விரைவாகச் செலுத்துவற்குத் தலைவன் கூறும் காரணம் யாது?
3. ‘வாரார் போல்வர் நம் காதலர் வாழேன் போல் வல்தோழியானே’- பொருள் விளக்கம் தருக.
4. குறுந்தொகையில் வரும் தோழி தலைவன் கேட்கும் முகமாய் கூறியது யாது?
5. ஏறுதழுவுதலின் அடிப்படை நோக்கம் என்ன?
6. சிற்றில் இழைத்தல், தொய்யில் எழுதுதல்- பொருள் விளக்கம் தருக.
7. வினை முடித்துத் திரும்பும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக அகநானூறு கூறுவது யாது?
8. அகநானூற்றில் வரும் தோழி தலைவனிடம் யார் பொருட்டு ,எச்செயலுக்கு வற்புறுத்துகின்றாள்?
9. நெடுநல்வாடை – பெயர்க்காரணம் தருக.
10. ‘வேம்புதலை யாத்த நோன்காழ் எ.`.கமொடு’- பொருள் விளக்கம் தருக.
11. தலைவியிடம் பெறும் இன்பம் எவற்றிற்கு ஒப்பாகாது என்பதை குறுந்தொகை எவ்வாறு உணர்த்துகிறது?
12. அரண்மனையில் எழும்பல் வேறு ஓசைகளை நெடுநல்வாடை எவ்வாறு கூறுகிறது?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. செவிலித்தாய் தன் மகளின் அறிவையும் ஒழுக்கத்தையும் கண்டு எங்ஙனம் வியந்தாள்?
14. தலைவனின் காதல் உள்ளம் நுமக்குப் பாடமாயுள்ள குறுந்தொகையில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
15. ஆடவர் ஏறுதழுவிய காட்சிகள் எவ்வகை நிகழ்வுகளுடன் ஒப்புமைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன?
16. உடன் போக்கு நிகழ்த்திய மகளை நினைத்து செவிலித்தாய் வருந்துவது அகநானூற்றில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
17. நெடுநல் வாடை காட்டும் குளிர்கால வருணனை குறித்து எழுதுக.
18. நாடகப்பாங்கில் கலித்தொகை அமைந்துள்ளமையைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டி எழுதுக.
19. தலைவனிடம் தனக்குக் காதல் பிறந்த அதிசயத்தினை அகநானூற்றுத் தலைவி எங்ஙனம் கூறுகிறாள்?

பகுதி - இ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. தோழி தலைவனிடம் வரைவு கடாவிய நிலையினைப் பாடமாயுள்ள நற்றிணை வழி எடுத்துரைக்க.
21. தலைவி கார்ப்பருவம் கண்டு,தோழியிடம் கூறும் கூற்றுகளைப் பாடமாயுள்ள குறுந்தொகை எவ்வாறு விளக்குகிறது?
22. 'ஏறுதழுவுதல்' தமிழர் பண்பாடு என்பதை 'முல்லைக்கலி' வழி ஆய்ந்துரைக்க.
23. தமிழர் திருமண முறை அகநானூற்றில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளமையை ஆய்க.
24. நெடுநல்வாடையில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.

**E - Mail Id for Uploading Answer Sheet**

**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM5F** Title of the Paper : **யாப்பருங்கலக்காரிகை**

DATE **:29.12.2020 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. யாப்பருங்கலம் எவ்வகை நூல்?
2. காரிகையின் வேறுபெயர் என்ன?
3. நான்கு நேரசையை எடுத்தெழுதுக.
4. சுரிதகம் என்றால் என்ன?
5. தொடை விகற்பம் எத்தனை? அவை யாவை?
6. ஓசை எத்தனை வகைப்படும்?
7. செய்யுள் உறுப்புக்கள் எத்தனை?
8. இரட்டைத்தொடை என்றால் என்ன?
9. மருட்பா என்றால் என்ன?
10. வனப்பு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11. வாழ்த்து எத்தனை வகைப்படும்?
12. கடைமுரண் என்றால் என்ன?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி**.

13. யாப்பருங்கலக்காரிகை எத்தனை இயல்களைக் கொண்டது? அவை யாவை?
14. அம்போதரங்கம் என்றால் என்ன?
15. சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
16. அடி என்பது யாது? அடியின் வகைகள் யாவை?
17. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
18. கலிப்பாவின் இனங்களைச் சான்றுடன் விளக்குக.
19. ஆசு எதுகை விளக்கம் தருக.

பகுதி - இ (3 X 10 = 30 மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி**.

20. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
21. தொடை எத்தனை வகைப்படும்? வகைப்படுத்துக.
22. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதி அதன் வகைகளை விளக்குக.
23. கொச்சகக் கலிப்பா எத்தனை வகைப்படும்? அவை ஒவ்வொன்றையும் விளக்குக.
24. தவிர்க்க வேண்டிய பத்துக் குற்றங்களை விளக்குக ?

.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM5G** Title of the Paper : **தமிழ் மொழி வரலாறு**

DATE **:02.01.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

---

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்)

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. "மொழி ஓர் அரிய கலை" - மு.வ. கூறும் காரணங்களில் ஏதேனும் இரண்டினை கூறுக.
2. போலச் செய்தல் என்பது யாது?
3. எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடுகளில் இரண்டினை தருக.
4. ஒலித்திரிபு எதனால் ஏற்படுகிறது.
5. "ஒரு பொருட் கிளவிகள்" - இரண்டினை எடுத்துக்காட்டுகளுடன் தருக.
6. "திசைச் சொற்கள்" - எடுத்துக்காட்டுன் விளக்கம் தருக.
7. "குறுமொழி" - விளக்குக.
8. உலக மொழிகளின் மூவகை பகுப்புகள் யாவை?
9. சொற்றொகை நிலை என்றால் என்ன?
10. தோத மொழி - குறிப்பெழுதுக.
11. மேலிருந்து கீழ் நோக்கி எழுதும் மொழிகள் இரண்டினை எழுதுக.
12. ஒலியில் நிகழும் மூவகை மாறுதல்கள் யாவை?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. உணர்ச்சி மொழி. அறிவுமொழி. செயல்மொழி - விளக்குக.
14. இயற்கையான இலக்கணப் பாகுபாட்டினை விளக்குக.
15. கடன் வாங்குதலுக்கான காரணங்களைக் குறிப்பிடுக.
16. கிளைமொழிக்கும் சிறப்பு மொழிக்குமான வேறுபாடுகளை விளக்குக.
17. மொழியினங்கள் - விளக்கம் தருக.
18. உலக மொழிகளில் எண்கள் கணக்கிடும் முறைகளைக் கூறுக.
19. கால்டுவெல் குறிப்பிடும் திராவிட மொழிகளின் பகுப்புகளைத் தருக.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. மொழியின் பண்பாடு குறித்த மு.வ. கருத்துக்களை கட்டுரைக.
21. மொழியின் தோற்றம் குறித்த கொள்கைகளை ஆராய்க.
22. இலக்கிய மொழியின் செல்வாக்கு - மு.வ. கருத்துக்களைச் சுருக்கி தருக.
23. கடன் வாங்கலால் மொழித் துறையில் ஏற்படும் நன்மை தீமைகளை விவரி.
24. தமிழ் வரிவடிவ வரலாற்றினை விளக்குக.

## E - Mail Id for Uploading Answer Sheet

## tamildepartment@lngovernmentcollege.com

**LOGANATHA NARAYANASAMY GOVT. COLLEGE (Autonomous), PONNERI – 601 204**
**NOVEMBER 2020 SEMESTER EXAMINATIONS**
**V SEMESTER – B.A. Tamil**

Paper Code : **UAM5H** Title of the Paper : **இலக்கியத் திறனாய்வு**
DATE **:06.01.2021 AN** Time : **3 Hours** Maximum Marks : **75 Marks**

பகுதி - அ **(10 X 2 = 20** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.**

1. சைவ சமயத்தின் எம்மூவகை வழிபாடுகள் சிந்துவெளி சமூகத்தின் சமயப் பண்புகளாக விளங்கின?
2. பண்டைய குல மரபுப் பெயர்களில் இரண்டினை எழுதுக.
3. “பாண்கடன்” என்றால் என்ன?
4. நடுகல் - குறிப்பெழுதுகு.
5. பண்டைக் காலத்தில் செல்வந்தர்கள் எனக் கணிக்கப்பட்டவர்கள் யார்?
6. பழந்தமிழரின் தலையாய பெண் தெய்வம் எது? அவ்வழிபாட்டைக் கூறும் நூல்கள் இரண்டினை எழுதுக.
7. சிவநேயச் செல்வர்களும் திருமாலடியார்களும் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்?
8. தேவாரம் பாடிய மூவர் யார்?
9. இரட்டைக் காப்பியங்கள் எவை?
10. சோழர்கள் வணிகத் தொடர்மில் இருந்த அயல் நாடுகளில் இரண்டினை எழுதுக.
11. பேரரசு, பெருந்தத்துவம் என்று கைலாசபதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார்?
12. பொய்மையுலகம், மெய்மையுலகம் என கைலாசபதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

பகுதி - ஆ **(5 X 5 = 25** மதிப்பெண்கள்**)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.**

13. வம்ப வேந்தருக்கு பெண் தர மறுத்த புறநானூற்றுப் பாடலை விளக்குக.
14. தொல்காப்பியர் குறிப்பிடும் நடுகல் அமைப்பதற்குரிய வினையமைதிகள் ஆறினை விளக்குக.
15. அன்னை வழிபாட்டு முறையின் தோற்றத்தினை விளக்குக.
16. நாயன்மார்களில் அனைத்து குலத்தினரும் உள்ளதை விளக்குக.
17. கணியன் பூங்குன்றனின் “யாதுமூரே யாவருங் கேளிர்” - பாடற் கருத்தினை விவரி.
18. நிலமானிய முறை - விளக்கம் தருக.
19. சோழ மன்னர்களை நாட்டு மக்கள் திருமாலின் அவதாரமாக கருதியதை விவரி.

பகுதி - இ **(3 X 10 = 30** மதிப்பெண்கள்)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.**

20. “அழிவும் ஆக்கமும்” என்ற தலைப்பிலான கருத்துக்களைச் சுருக்கி தருக.
21. பண்டைத் தமிழரின் வீரவணக்க முறையினை விளக்குக.
22. “தமிழ் வளர்த்த நாயன்மார்கள்” – கட்டுரைக்க.
23. “பண்டைத் தமிழரின் அறமும் அரசியலும்” – ஆய்க.
24. “சைவ சித்தாந்தம் தமிழ் மரத்தில் காய்த்துக் கனிந்த கனி” **-** நிறுவுக.

**E - Mail Id for Uploading Answer Sheet**
**tamildepartment@lngovernmentcollege.com**